மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற பாலத்தை ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

19—

அங்கன்வாடி மையம்

***42077— திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், தளபதிசமுத்திரம் ஊராட்சி, கீழசண்முகபுரத்தில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், தளபதிசமுத்திரம் ஊராட்சி, கீழசண்முகபுரம் கிராமத்திலுள்ள பயனாளிகள் அனைவரும் அருகிலுள்ள மேட்டுகாலனியில் இயங்கிவரும் முதன்மை அங்கன்வாடி மையத்தில் பயனடைந்து வருவதால், கீழசண்முகபுரம் கிராமத்தில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்கும் தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிறிய வணிகர்களின் வாழ்வாதாரத்தை நிலைநிறுத்த இன்றையதினம்*

2016 ஜனவரி 22]

அம்மா சிறு வணிகர் கடன் உதவித் திட்டம் என்ற திட்டத்தின் மூலமாக மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் நகரக் கூட்டுறவு வங்கியின் மூலமாக 5 ஆயிரம் ரூபாய் வரை வட்டியில்லாக் கடன் உதவி; சிறு வணிகர்களுக்கு உதவும் வகையில் 11 சதவிகித வட்டியை தமிழக அரசே ஏற்கும் என்ற அறிவிப்பு; பூக்கள், பழங்கள், காய்கறிகள், உணவுப் பொருட்கள் போன்றவற்றை விற்கும் தெருவோர சிறு வணிகர்கள், தள்ளுவண்டி வியாபாரிகள், பெட்டிக் கடை நடத்துவோர் இத்திட்டத்தின்மூலம் பயன்பெறுதல்; எளிய தவணையில் வாரம் ரூ.200/- வீதம் 25 வாரங்களில் திரும்பச் செலுத்தும் வசதித் திட்டம்; குறித்த காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்தும் சிறிய வணிகர்களுக்கு 4 சதவிகித குறைந்த வட்டியில் மீண்டும் கடன் உதவி பெறும் வசதி; மேலும், இத்திட்டத்திற்காக 500 இடங்களில் சிறப்பு முகாம்களை ஏற்பாடு செய்து, வணிகர்களின் துயர் துடைத்து, தமிழக வணிகர்களின் வாழ்வில் ஒளியேற்றிய தாயே! தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கை சிறப்பான முறையில் வழிநடத்தி, தமிழக மக்களின் இதயங்களில் நீங்கா இடத்தில் இருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, தமிழகத்தில் உள்ள என்னைப் போன்ற, ஒட்டுமொத்த வணிகர்களின் சார்பில் கோடானு கோடி நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், தளபதிசமுத்திரம் ஊராட்சியில் உள்ள கீழசண்முகபுரம் மற்றும் அதன் அருகில் உள்ள வேப்பங்குளம் ஆகிய இரு கிராமங்களில் 30 குழந்தைகள் இருக்கிறார்கள். இங்குள்ள அங்கன்வாடி மையம் விவசாய சங்கக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதனால் புதிய அங்கன்வாடி மையத்தை கீழசண்முகபுரத்தில் கட்டித் தர மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கீழசண்முகபுரம் கிராமத்தில் அங்கன்வாடி மையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருந்தார். இப்பொழுதுள்ள கணக்குப்படி அங்குள்ள மக்கள்தொகை 179. இப்பொழுது 6 குழந்தைகள் பயன்பெற்று வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

வேறு பகுதியைச் சுட்டிக்காட்டுகிறார் என்று கருதுகிறேன். அந்தப் பகுதியிலே 30 குழந்தைகள் இருப்பதாக அவர் குறிப்பிடுகிறார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அதிகமாக குழந்தைகள் வரத்து இருப்பின், தேவைக்கேற்ப புதிய அங்கன்வாடி மையம் கட்டிக் கொள்ளலாம் என்ற உத்தரவை தந்திருக்கிறார்கள். அதனடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அந்தப் பகுதியில் புதிய அங்கன்வாடி மையம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

திரு. ஆ. நாராயணன்: *இந்த வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதியின் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றி கூறி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

20—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***51071 திருமதி செல்வி ராமஜெயம்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதியில் மகளிருக்கென ஒரு தனி கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டும்